THE HINDU ENGLISH
Dated: 05.03.2025

# Look into complaints of political parties, EC tells State-level polling officers

Sreeparna Chakrabarty
NEW DELHI

Amid complaints of anomalies in voters' lists, the Election Commission (EC) on Tuesday asked its State-level officials to hold regular interactions with political parties to resolve any issues within the existing statutory framework.

On the first day of a two-day conference of Chief Electoral Officers (CEOs) of all States/Union Territories, the commission directed each of them to submit issue-wise action taken reports by March 31.

The directions came amid the Trinamool Congress's allegations of duplication of voter ID numbers in West Bengal. The Congress has alleged voter list manipulation, specially in the Maharashtra Assembly election.

**'Be approachable'**

On Tuesday, the three-member commission led by Chief Election Commissioner (CEC) Gyanesh Kumar interacted with the CEOs on a series of topics. According to a senior official in the poll body, the discussion will pave the way for improvements in election management in the country within the established legal framework. He also directed officials to be approachable and responsive to political parties.


CEC Gyanesh Kumar addressing a conference of CEOs in New Delhi. PTI

Mr. Kumar told them to work transparently and fulfil all statutory obligations diligently and as per the existing legal framework – the Representation of the People Act, 1950 and 1951; Registration of Elector Rules, 1960; Conduct of Election Rules, 1961; and the instructions issued by the EC from time to time.

The CEC asked officials to ensure that all citizens of India who are aged above 18 are registered as electors, according to an official statement.

**Ease of voting**

Officials were directed to make efforts to have between 800 and 1,200 electors in each polling booth, and ensure that it is within a two-km distance from the residence of each elector. Polling booths with assured minimum facilities should be established for the ease of voting in rural areas.

Booths should also be established in high-rise buildings as well as slum clusters to increase voting in urban areas.

After a comprehensive mapping of the constitutional framework and statutes, the EC has identified 28 distinct stakeholders in the entire election process, including CEOs, political parties, candidates, polling agents, etc. The conference aims to strengthen the capacity building of each of these stakeholders, the statement said.

THE HINDU - ENGLISH
Dated: 05. 03. 2025

# Poll body's clarification on voter IDs a 'cover-up': Trinamool MP

By the EC's handbook, it is impossible for voters in two constituencies to have the same EPIC number, Saket Gokhale says; he adds that discrepancies raise serious questions as Commissioners are appointed by panel in which govt. is in a majority

**The Hindu Bureau**
NEW DELHI

Firing a fresh salvo at the Election Commission (EC), the Trinamool Congress on Tuesday said it was impossible for voters in two constituencies to have the same Elector Photo Identity Card (EPIC) number, citing the panel's own handbook.

On Sunday, in response to West Bengal Chief Minister and Trinamool president Mamata Banerjee's charge that the BJP was adding fake voters from other States to the electoral rolls in the State, the EC had issued a clarification stating that certain States used the same "alphanumeric series" which resulted in same number and this did not imply duplicate or fake voters. It said an elector could vote only at the polling booth mentioned in his EPIC.


The Trinamool says the EC must disclose how many voter ID cards are active and how many have the same number. FILE PHOTO

Calling the EC's clarification a "cover-up", Trinamool's Rajya Sabha member Saket Gokhale, in a post on the social media platform X, said, "The 'Handbook for Electoral Registration Officers' shows that the claims made by the panel are false. EPIC numbers are an alphanumeric sequence of three letters and seven digits. The EC handbook clearly states that the three letters, known as a Functional Unique Serial Number (FUSN), are different for every Assembly constituency."

He asked, 'Therefore, it is impossible for voters in two different Assembly constituencies (even in the same State) to have the same first three letters on their EPIC. How is it then that the same EPIC numbers as voters in West Bengal have been allotted to random people in Haryana, Gujarat, and other States?"

Countering the EC's clarification that even with two people having the same EPIC number, they can only vote in the respective constituencies where they are enrolled, Mr. Gokhale said the voter was linked to his photo by the EPIC number.

**Photo mismatch issue**

"When a voter in Bengal goes to cast his vote, his photo on the electoral roll will be different if the same EPIC number has been allotted to a person in another State. This will lead to the refusal of voting due to a photo mismatch. By allotting the same EPIC numbers in different States, voting can be denied to those who are likely to vote for non-BJP parties due to a photo mismatch," he said.

The Trinamool leader said the EC rules mandate that the software used for issuing the EPIC cards keeps track of every used and unused number to ensure that the same EPIC number is not allotted to multiple people. "This clearly reeks of a conspiracy to conduct voter suppression in favour of the BJP, where voters in non-BJP areas are being targeted by issuing their EPIC numbers to people in other States," Mr. Gokhale said.

Pointing out that the Election Commissioners were now appointed by a panel in which the government was in a majority, he said these discrepancies raised serious questions.

"If the EC is compromised on behalf of the BJP, there is zero possibility of elections being free and fair. The EC must come clean and disclose how many EPICs are currently active and how many of those bear the same number," he said.

Mr. Gokhale urged the poll agency to "come clean" on this and demanded an impartial investigation into this 'duplicate voter ID scam'.

THE HINDU

Dated: 05.03.2025

# Double trouble

## The Aadhaar seems the default bet to restrict a voter to one polling location

The integrity of the electoral system in India is dependent upon the confidence reposed in it by prospective voters and the participatory political parties. In recent years, the Election Commission of India (ECI) has drawn flak – from overblown to deserved reasons – from political parties and civil society activists concerned about trends in Indian democracy. A new complaint after recent State elections relates to the increased number of electors in the Assembly polls when compared to the numbers registered in the general election for the same year (2024). While a report in *The Hindu* found that such discrepancies in electorate registration were not unusual when compared to previous election cycles, the question (raised vociferously by the Opposition Congress party) as to how a State such as Maharashtra registered an increase of 48 lakh voters in just six months since the general election has not been adequately answered by the ECI. This along with the ECI's disclosure that the nature of registration allowed for different electors to have the same Electors Photo Identification Card (EPIC) number, has allowed Opposition parties, particularly the Trinamool Congress, to raise questions about the credibility of the registration process. What is worrisome is the possibility of electors voting across States.

Prima facie, this discrepancy in EPIC numbers – which the ECI has averred that it will rectify by updating the numbers in its voter database to make them unique – is not problematic. Even if the EPIC number is shared by different voters, they can only vote with their verified ids. Yet, the larger problem, of a possibility of a voter having multiple EPIC numbers across different States, calls the process in question. For example, a migrant voter can vote in a particular State of residence and in his/her home State if elections are held in close succession as there is a good possibility of the duplicate EPIC number remaining in the database. The most effective solution would be to link the Aadhaar number and biometric verification for voting. But this is still not foolproof. The Aadhaar's purpose is to identify residents, and not citizens, and would have to be supplemented by another proof for voting eligibility. Second, an Aadhaar number on electoral rolls could result in misuse such as profiling, and the ECI has to mask it when the rolls are made available to political parties. Besides, biometric verification for de-duplication should be supplemented with clear alternative identity verification as the former has the potential of excluding genuine voters because of technological failures. The ECI must be open to undertaking a clear de-duplication exercise that will allow a voter to have only one EPIC number and voter id, with the eligibility to vote only in their area of residence.

THE HINDU- ENGLISH
Dated: 05.03.2025

# HC dismisses Congress MP's plea to reject case against his election

Mohamed Imranullah S.
CHENNAI

The Madras High Court on Tuesday refused to reject an election petition filed by DMDK founder Vijayakant's son V. Vijaya Prabhakaran challenging the victory of Congress MP B. Manickam Tagore from the Virudhunagar Lok Sabha constituency in 2024.

Justice N. Sathish Kumar dismissed the application filed by the MP to reject the election petition, and also rejected another application from him to strike off almost all paragraphs from the plaint filed in support of the election petition on the ground that they were baseless allegations made without any tangible material.

The judge directed the MP and the election petitioner to submit the draft issues by the next date of hearing so that the court could frame the issues to be decided in the election petition, conduct a full-fledged trial by examining the witnesses to determine the veracity of the allegations, and pronounce a verdict.


B. Manickam Tagore

The Virudhunagar constituency witnessed a three-cornered fight between Mr. Tagore, Mr. Prabhakaran and actor R. Radikaa Sarathkumar of the BJP. Mr. Tagore polled 3,85,256 votes and defeated his nearest rival, Mr. Prabhakaran, by a slim margin of 4,379 votes.

In his election petition, Mr. Prabhakaran had accused Returning Officer V.P. Jeyaseelan of having succumbed to the pressure exerted by Ministers K.K.S.S.R. Ramachandran, Thangam Thennarasu and P. Moorthy for furthering the prospects of the election of Mr. Tagore, the candidate of their alliance.

Mr. Prabhakaran had also raised other grounds such as improper acceptance of nomination, claiming that the MP had not disclosed all the details of his assets and criminal cases; and corrupt practices such as bribing of the voters through the distribution of a 'guarantee card'.

Paying cash for votes, booth capture, malpractices during the counting of votes, improper rejection of postal ballots polled in favour of the election petitioner, and alleged excess expenditure by the MP were the other grounds on which his election had been challenged.

Mr. Tagore had stated that the guarantee card contained an assurance given by the Congress in its election manifesto and, therefore, it could not be termed a corrupt practice.

He relied upon a catena of Supreme Court decisions to support his contention.

DECCAN CHRONICLE
Dated: 05.03.2025

# Trinamul calls ECI biggest fraud, asks it to come clean on EPIC

DC CORRESPONDENT
NEW DELHI, MARCH 4

Stepping up the pressure on the Election Commission of India on the duplicate voter identity numbers controversy, the Trinamul Congress on Tuesday dismissed the poll body's clarifications as a "cover-up" and cited its own guidelines to assert that two cards cannot have identical numbers.

Calling the EC a "caged bird", the party urged the EC to "come clean" and disclose how many EPIC cards are currently active and how many of those bear the same number. The TMC also sought an "impartial investigation" to be conducted "on this duplicate voter ID scam".

"The ECI is the biggest fraud, just like the ED and the CBI. The Supreme Court once called the CBI a 'caged parrot', the ECI is also a caged bird... The BJP can do anything to win an election if they feel that they are going to lose. This cannot happen without EC officials being involved," said TMC Lok Sabha MP Kirti Azad.

A day after threatening the EC that it would expose it further, TMC Rajya Sabha MP Saket Gokhale on Tuesday shared on X excerpts from the "Handbook For Electoral Registration Officers" to counter the ECs clarifications issued Sunday on the issue, which was first raised by TMC supremo and West Bengal Chief Minister Mamata Banerjee.

"Yesterday, the All India Trinamul Congress (TMC) had given the Election Commission of India 24 hours to admit and accept their blunder on the duplicate voter ID fraud issue... Clearly the ECI, which has been exposed, wants to brazen it out. The 'clarification' given by the ECI (on a Sunday) in response to CM Mamata Banerjee is actually a cover-up. They have admitted there's something wrong but are refusing to accept it. The false clarification given by ECI contradicts their own rules and guidelines. Therefore, here are some new details as promised," Mr Gokhale said. P7

# TRINAMUL CALLS ECI BIGGEST FRAUD, ASKS IT TO COME CLEAN ON EPIC

FROM PG 1

Countering the ECI point wise, Mr Gokhale wrote that the ECI's first claim that EPIC with the same number were issued to multiple voters due to certain states using the same alphanumeric series is wrong and the fact is that EPIC card numbers are an alphanumeric sequence of 3 letters and 7 digits.

"The ECI handbook clearly states that the three letters, known as a Functional Unique Serial Number (FUSN) are different for EVERY Assembly constituency. Therefore, it is impossible for voters in two different Assembly constituencies (even in the same state) to have the same first three letters on their EPIC. How is it then that the same EPIC numbers as voters in West Bengal have been allotted to random people in Haryana, Gujarat, and other states?" said Mr Gokhale.

Dismissing the ECI's second claim that even with two people having the same EPIC number, they can only vote in their respective constituency where they are enrolled, the TMC MP said in photo electoral rolls, the elector is linked to his/her photo by the EPIC number.

Therefore, when a voter in Bengal goes to cast their vote, his/her photo on the electoral roll will be different if the same EPIC number has been allotted to a person in another state. This will lead to refusal of voting due to a photo mismatch. By allotting same EPIC numbers in different states, voting can be denied to those who are likely to vote for non-BJP parties due to photo mismatch," he added.

Countering the ECI's third claim that the same EPIC numbers were issued to different people in various states due to duplication of alphanumeric codes and it does not make a difference, Mr Gokhale said ECI rules mandate that the software used for issuing EPIC keeps a track of every used and unused number to ensure that same EPIC is not allotted to multiple people.

"Also, EPIC number links the details of voters with their photo and it is considered to be a permanent unique ID. Therefore, it is impossible that any "error" can lead to the same EPIC numbers being allotted to multiple people in different states. Also, since EPIC number is linked to voter details, a duplicate EPIC number will lead to denial of voting," he added.

"This clearly reeks of a conspiracy to conduct voter suppression in favor of the BJP where voters in non-BJP areas are being targeted by issuing their EPIC numbers to people in other states."

TIMES OF INDIA

Dated: 05.03.2025

# Duplicate EPIC numbers: Do they pose threat to fair polls?

Times News Network

Duplicity in some electors photo identity card (EPIC) numbers issued in some parts the country—recently flagged by the Trinamool Congress (TMC) — has become a bone of contention, with TMC and Congress even alleging a conspiracy to introduce fake voters. **TOI** takes a deep dive to investigate how duplicate EPIC numbers came about and whether it is possible for two electors with the same EPIC number to vote interchangeably.



**VARIED OPTIONS:** EPIC is not mandatory for voting. Alternative documents, including Aadhaar, PAN no., driving licence, passport, among others, are also accepted for voter identification

## TOI Explains

**What is EPIC?**

EPIC, introduced in 1993, is an identification document issued to each elector after he is enrolled in the voter's list. EPIC is issued based on details included in the photo electoral roll (introduced in 2005) like the elector's name, photo, name and number of assembly constituency and the the polling booth where an elector is eligible to vote by virtue of being ordinarily resident. Thus, the elector can only vote in the assembly constituency mentioned on his EPIC card.

**Why then the duplicity in EPIC numbers?**

According to the Election Commission (EC), the allotment of identical EPIC number of series to some electors from different states or Union territories was due to the decentralised and manual mechanism which was followed before the electoral roll database was shifted to the ERONET platform in 2017. Chief electoral officers of certain states/UTs possibly used the same EPIC alphanumeric series — either inadvertently or due to lack of due diligence required by EC guidelines—creating a scope for duplicate EPIC numbers being allotted to electors in different assembly constituencies of different states/UTs.

**Can two electors having the same EPIC number vote interchangeably?**

No. When an elector wants to vote, he usually carries EPIC for identification. However, EPIC is not mandatory for voting. 11 alternative documents — like Aadhaar, PAN no., driving licence, passport etc — are also accepted for voter identification. The key to voting at a given polling booth in a given assembly constituency (AC), is being enrolled in the voters' list relevant to that polling booth and AC. So, it is the AC, not the EPIC number, which is relevant for eligibility to vote.

**Was the duplicity in EPIC numbers raised earlier?**

Each year, nationwide electoral roll revision is taken up and draft rolls shared with political parties for filing claims and objections. No voter can be added, deleted or shown as shifted in the rolls, without filling up the relevant statutory form for the purpose. The electoral registration officer (ERO), usually the block development officer appointed by the concerned state/UT govt, approves the requests made through these forms.

**What next?**

EC, in a statement issued on Sunday, said it would rectify cases of duplicate EPIC numbers and ensure allotment of unique EPIC number to each registered elector. New guidelines in this regard will be issued soon and the ERONET 2.0 platform updated to aid and assist in the process.

# EC's stand on duplicate voter ID numbers is 'cover-up': TMC

**New Delhi:** Trinamool Congress (TMC) on Tuesday dismissed the Election Commission's clarifications on the duplicate voter ID numbers issue as a "cover-up" and cited the poll panel's own guidelines to assert that two electoral cards cannot have identical numbers.

On Monday, it had called the duplication in electronic electoral photo identity card (EPIC) numbers an "epic scam" and gave EC a 24-hour deadline to "accept its mistake."

TMC MP Saket Gokhale on Tuesday shared excerpts from the 'Handbook for Electoral Registration Officers' on X to counter EC's clarifications on the issue, first raised by West Bengal chief minister and party chief Mamata Banerjee on Feb 27.

"The 'clarification' by EC (on Sunday) in response to CM Mamata Banerjee is actually a cover-up. They have admitted there's something wrong but are refusing to accept it. The false 'clarification' given by EC contradicts its own rules and guidelines," he said. The process of issuing photo ID cards is laid down in the handbook, he added.

Countering EC's clarification that even if two people have the same EPIC number, they can only vote in their respective constituency where they are enrolled, he said the voter is linked to his photo by the EPIC number. TNN

THE NEW INDIAN EXPRESS
Dated: 05.03.2025

# Petition against 2024 poll victory: MP's plea binned

CHENNAI: The Madras HC has dismissed an application filed by Congress MP Manickam Tagore, representing Virudhnagar LS constituency, seeking to reject the petition filed by DMDK's Vijaya Prabhakaran challenging his victory in the 2024 polls. "Perusal of the entire materials placed before this court, this court has no hesitation in arriving at a conclusion that the election petition cannot be held as vague or bereft of material facts. This court is of an opinion that rejection of the election petition is unacceptable and accordingly, this court is inclined to proceed with the election petition," Justice N Sathish Kumar said in the order passed on Tuesday.

He directed the main election case to be posted for hearing on March 14. *ENS*

D. T. NEXT Dated: 05.03.2025

# HC rejects Cong MP's plea against DMDK leader's election petition

**CHENNAI: The Madras High Court refused the plea of Parliament member Manickam Tagore of the Congress, seeking to strike down the pleas against him moved by DMDK late leader Vijayakant's son Vijaya Prabhakaran challenging his victory in the Virudhunagar Lok Sabha election.**

Justice N Sathish Kumar ordered to frame issues for trial in the election petition preferred by Vijaya Prabhakaran challenging the Congress leader's election victory, and posted the matter to next week.

Manickam Tagore contested the 2024 general election from Virudhunagar, his sitting seat, while his main challenger was Vijaya Prabhakaran of the DMDK.



**Manickam Tagore**



**Vijaya Prabhakaran**

After the neck-to-neck contest, Tagore was declared victorious though with a low margin of 4,379 votes. He secured 3,85,256 votes while Vijaya Prabhakaran obtained 3,80,877 votes.

Aggrieved by the loss, Vijaya Prabhakaran moved the election petition seeking to recount all the postal votes polled in Virudhunagar, including the rejected postal ballots. He also sought to recount the polled votes in the electronic voting machines.

Vijaya Prabhakaran alleged that Tagore suppressed genuine information in his election affidavit and resorted to sneaky approaches to secure victory. Hence, he sought to declare his election victory as null and void and grant relief to him.

Tagore alleged that the allegations levelled against him were scandalous and frivolous, and that the election petition was an abuse of law. He moved an application in the High Court seeking to strike down the pleadings against him in the election petition.

However, the HC refused his plea and ordered to continue the trial in the election case.

THE HINDU - TAMIL

Dated: 05.03.2025

# அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டி பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்

## தலைமை தேர்தல் ஆணையர் வலியுறுத்தல்

புதுடெல்லி

மேற்கு வங்க மாநிலத்தில் பாஜகவுக்கு ஆதரவாக மாநில தேர்தல் ஆணையம் செயல்படுவதாக ஆளும் திரிணமூல் காங்கிரஸ் கட்சி குற்றம்சாட்டி வருகிறது.

"பாஜக வெற்றிபெற வேண்டும் என்பதற்காக தேர்தல் ஆணையம் போலி வாக்காளர்களை பட்டியலில் சேர்த்து வருகிறது. இந்த விவகாரம் தொடர்பாக 24 மணி நேரத்தில் தேர்தல் ஆணையம் விளக்கம் அளிக்க வேண்டும் என கோரியும், அது அமைதியாக உள்ளது" என எக்ஸ் பதிவில் திரிணமூல் தெரிவித்திருந்தது.

இந்த சூழ்நிலையில், மாநில தலைமைதேர்தல் ஆணையர்கள், மாவட்ட தேர்தல் அதிகாரிகள், வாக்காளர் பட்டியல் அலுவலர்களின் கருத்தரங்கு நேற்று நடைபெற்றது. இதில் இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பங்கேற்று பேசியதாவது:

மாநில தேர்தல் ஆணையத்துடன் அரசியல் கட்சிகளுக்கு முரண்பாடு ஏற்பட்டால் அதனை களைவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். இதற்காக, அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டி அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும். சட்டப்பூர்வ கட்டமைப்புகளுக்கு உட்பட்டு அப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது அவசியம். பொய்யான புகார்களை பயன்படுத்தி எந்தவொரு தேர்தல் பணியாளர்களையோ அல்லது அதிகாரிகளையோ மிரட்ட கூடாது.

இவ்வாறு ஞானேஷ் குமார் தெரிவித்தார்.

DINAMALAR Dated: 05.03.2025

# அரசியல் கட்சிகளுடன் பேசுங்கள்

## தேர்தல் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்

**புதுடில்லி, மார்ச் 5–** தேர்தல் தொடர்பான பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு, அரசியல் கட்சிகளுடன், அந்தந்த நிலையில் உள்ள தேர்தல் அதிகாரிகள் அடிக்கடி ஆலோசனை நடத்த வேண்டும் என, தலைமை தேர்தல் கமிஷன் அறிவுறுத்தியுள்ளது.

ஒரே வாக்காளர் அடையாள அட்டை எண், வெவ்வேறு மாநிலங்களில் உள்ள வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக, மேற்கு வங்க முதல்வரும், திரிணமுல் காங்., தலைவருமான மம்தா பானர்ஜி சமீபத்தில் குற்றஞ்சாட்டினார்.

'இவ்வாறு ஒரே எண் இருந்தாலும், ஓட்டுச்சாவடி உள்ளிட்ட விபரங்களில் வேறுபடும். அதனால், போலியாக வாக்காளர் சேர்க்கப்படுவதாகக் கூற முடியாது' என, தலைமை தேர்தல் கமிஷன் விளக்கம் அளித்திருந்தது.

இந்நிலையில், மாநில தேர்தல் அதிகாரிகள் மாநாடு, டில்லியில் நேற்று நடந்தது. இதில் தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ்குமார் பேசியதாவது:

வாக்காளர் பட்டியலில், 18 வயது நிரம்பியவர்களை சேர்ப்பதில் முழுமையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அனைத்து நிலைகளில் உள்ள தேர்தல் அதிகாரிகள், ஊழியர்களுக்கு, தேர்தல் தொடர்பான பயிற்சிகள் முறையாகக் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

தேர்தல் தொடர்பாக, அரசியல் கட்சிகளுக்கு சில சந்தேகங்கள் இருக்கலாம். சில ஆலோசனைகளை கட்சிகள் வழங்கலாம். இவை தேர்தல் நடைமுறைகளை மேம்படுத்தவும், வெளிப்படைத்தன்மை உள்ளதாகவும் மாற்ற உதவும்.

அதனால், அரசியல் கட்சிகளுடன், மாவட்ட, மாநில நிலைகளில் அடிக்கடி ஆலோசனை கூட்டங்களை நடத்தி, கட்சிகளின் கருத்துகளை பெற வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

DAILY THANTHI
Dated: 05.03.2025

குற்றவியல் வழக்குகளில் சிறை தண்டனை பெற்ற

# அரசியல்வாதிகளின் தகுதியிழப்பு காலத்தை எத்தனை தடவை ரத்து செய்தீர்கள்?

## தேர்தல் கமிஷனுக்கு சுப்ரீம் கோர்ட்டு கேள்வி

புதுடெல்லி, மார்ச்.5-

குற்றவியல் வழக்குகளில் சிறை தண்டனை பெற்ற அரசியல்வாதிகள், தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதியிழப்பு காலத்தை ரத்து செய்தது மற்றும் குறைத்தது பற்றிய விவரங்களை அளிக்குமாறு தேர்தல் கமிஷனுக்கு சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டது.

### தேர்தல் கமிஷனுக்கு அதிகாரம்

குற்றவியல் வழக்குகளில் 2 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட அரசியல்வாதிகள், சிறைவாசம் முடிந்து 6 ஆண்டுகள்வரை தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்படுகிறது. 1951-ம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 8 மற்றும் 9-வது விதிகளின்படி, இத்தடை விதிக்கப்படுகிறது.

அதே சமயத்தில், மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 11-வது பிரிவு, அரசியல்வாதிகள் தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதியிழப்பு காலத்தை ரத்து செய்யவோ அல்லது குறைக்கவோ தேர்தல் கமிஷனுக்கு அதிகாரம் அளிக்கிறது.

### ஆயுட்கால தடை

இதற்கிடையே, அஸ்வினி உபாத்யாயா என்பவர், சிறைத்தண்டனை பெற்ற அரசியல்வாதிகள் தேர்தலில் போட்டியிட 6 ஆண்டுகள் தடை என்பதற்கு பதிலாக, ஆயுட்கால தடை விதிக்கக் கோரி சுப்ரீம் கோர்ட்டில் பொதுநல மனு தாக்கல் செய்தார்.

இதற்கு மத்திய அரசும், தேர்தல் கமிஷனும் பதில் மனு தாக்கல் செய்ய சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டு இருந்தது. மத்திய அரசு தாக்கல் செய்த பதில் மனுவில், ஆயுட்கால தடை விதிக்க தேவையில்லை என்று கூறப்பட்டு இருந்தது.

இந்நிலையில், சுப்ரீம் கோர்ட்டில் நீதிபதிகள் திபங்கர் தத்தா, மன்மோகன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு நேற்று இம்மனு விசாரணைக்கு வந்தது.

அப்போது, கோர்ட்டின் ஆலோசகரான மூத்த வக்கீல் விஜய் ஹன்சாரியா, "தண்டிக்கப்பட்ட அரசியல்வாதிகளின் தகுதியிழப்பு காலத்தை ரத்து செய்தது மற்றும் குறைத்தது பற்றிய விவரங்கள் இல்லை. அது அளிக்கப்பட வேண்டும்" என்று கூறினார்.

### எத்தனை வழக்குகளில் ரத்து?

அதைக்கேட்ட நீதிபதிகள், "தேர்தல் கமிஷன் தனது அதிகாரத்தை பயன்படுத்தி, எத்தனை வழக்குகளில் அரசியல்வாதிகளின் தகுதியிழப்பு காலத்தை ரத்து செய்தது மற்றும் குறைத்தது என்ற விவரங்களை 2 வாரங்களில் சமர்ப்பிக்கவேண்டும்" என்று உத்தரவிட்டனர்.

2 வாரங்களுக்கு பிறகு, அதற்கு மனுதாரர் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்றும் உத்தரவிட்டனர்.

லோக் பிரஹாரி என்ற தொண்டு நிறுவனம் தாக்கல் செய்த இதே போன்ற மனு, இன்னொரு அமர்வில் நிலுவையில் இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டது. அதை ஏற்ற நீதிபதிகள், அஸ்வினி உபாத்யாயாவின் மனுவை தலைமை நீதிபதிக்கு அனுப்பி, இரண்டையும் இணைத்து ஒரே அமர்வில் விசாரிக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

DAILY THANTHI
Dated: 05.03.2025

தேர்தல் வழக்கில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நீக்கக்கோரி

# காங்கிரஸ் எம்.பி. தாக்கல் செய்த மனு தள்ளுபடி

## ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை, மார்ச்.5-

நாடாளுமன்ற தேர்தல் கடந்த ஆண்டு நடந்தபோது, விருதுநகர் தொகுதியில் காங்கிரஸ் கட்சி சார்பில் மாணிக்கம் தாகூர் போட்டியிட்டு, 4 ஆயிரத்து 379 ஓட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இவரது வெற்றியை எதிர்த்து அதே தொகுதியில் தே.மு.தி.க. சார்பில் போட்டியிட்டு தோல்வி அடைந்த விஜயகாந்தின் மகன் விஜய பிரபாகரன், சென்னை ஐகோர்ட்டில் தேர்தல் வழக்கை தொடர்ந்தார்.

அதில், மாணிக்கம் தாகூர் வேட்புமனுவில் உண்மை தகவல்களை மறைந்துள்ளார். ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்பது உள்பட பல குற்றச்சாட்டுகளை சுமத்தியிருந்தார். இதில் கூறப்பட்டுள்ள சில குற்றச்சாட்டுகளை நீக்கக்கோரி சென்னை ஐகோர்ட்டில் மாணிக்கம் தாகூர் மனு தாக்கல் செய்தார். இந்தநிலையில் இந்த வழக்கு நீதிபதி என். சதீஷ்குமார் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, குற்றச்சாட்டுகளை நீக்கக்கோரி மாணிக்கம் தாகூர் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்தார். தேர்தல் வழக்கு விசாரணையை அடுத்த வாரத்துக்கு தள்ளிவைத்தார்.

வாக்காளர்களின் வீடுகளில் இருந்து

# 2 கி.மீ. தூரத்துக்குள் வாக்குச்சாவடி இருப்பதை உறுதி செய்யுங்கள்

## அதிகாரிகளுக்கு தலைமை தேர்தல் கமிஷனர் உத்தரவு

புதுடெல்லி, மார்ச்.5-

அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகள் பங்கேற்றுள்ள 2 நாள் மாநாடு டெல்லியில் நேற்று தொடங்கியது.

ஞானேஷ்குமார், இந்திய தலைமை தேர்தல் கமிஷனராக பொறுப்பேற்ற பின் நடைபெறும் முதல் மாநாடு இதுவாகும். மாநாட்டை அவர் தொடங்கி வைத்தார். பல்வேறு விஷயங்கள் குறித்து தேர்தல் கமிஷனர்கள் சுக்பீர் சிங் சந்து, விவேக் ஜோஷி, தலைமை தேர்தல் அதிகாரிகளுடன் அவர் கலந்துரையாடினார்.

மாநாட்டில் ஞானேஷ்குமார் பேசும்போது கூறியதாவது:-

வாக்குச்சாவடிகளை பொறுத்தவரை, ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் 800 முதல் 1,200 வாக்காளர்கள் இருக்க வேண்டும். வாக்காளரின் வீட்டில் இருந்து 2 கி.மீ. தூரத்துக்குள் வாக்குச்சாவடிகள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். வாக்களிப்பதை எளிமைப்படுத்தவும், அதிகரிக்கவும் கிராமப்புற வாக்குச்சாவடிகள் அடிப்படை வசதிகளை நிறைவு செய்ய வேண்டும். நகர்ப்புறங்களில் உயரமான கட்டிடங்கள் மற்றும் குடிசைப்பகுதிகளில் கூட வாக்குச்சாவடிகள் நிறுவப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

தலைமை தேர்தல் அதிகாரிகளின் மாநாட்டுக்கு ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும் ஒரு மாவட்ட தேர்தல் அதிகாரி மற்றும் ஒரு வாக்காளர் பதிவு அதிகாரி அழைக்கப்பட்டு உள்ளனர். இந்த நடைமுறை முதல் முறையாக செயல்படுத்தப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

DINA MANI Dated: 05.03.2025

# தேர்தல் வழக்கு: காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர் மனு தள்ளுபடி

சென்னை, மார்ச் 4: மக்களவைத் தேர்தலில் தேமுதிக சார்பில் எதிர்த்து போட்டியிட்ட விஜய பிரபாகரன் தொடர்ந்த தேர்தல் வழக்கில், தனக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நீக்கக் கோரி விருதுநகர் எம்.பி. மாணிக்கம் தாகூர் தாக்கல் செய்த மனுவை சென்னை உயர்நீதி மன்றம் தள்ளுபடி செய்தது.

மக்களவைத் தேர்தலில் விருதுநகர் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட்ட மாணிக்கம் தாகூர் 4 ஆயிரத்து 379 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இந்த வெற்றி செல்லாது என அறிவிக்கக் கோரி அவரை எதிர்த்து தேமுதிக சார்பில் போட்டியிட்ட விஜய பிரபாகரன் சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு தொடர்ந்திருந்தார்.

அதில், மாணிக்கம் தாகூர் தாக்கல் செய்திருந்த வேட்புமனுவில் பல உண்மை தகவல்களை மறைத்துள்ளார். அவர் இந்தத் தேர்தலில் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டு வெற்றி பெற்றுள்ளார் என்பன உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் கூறப்பட்டிருந்தன.

இந்த வழக்கில் தனக்கு எதிராக கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நீக்கக் கோரி மாணிக்கம் தாகூர் எம்.பி. உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனு நீதிபதி என். சதீஷ்குமார் முன் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது.

வழக்கை விசாரித்த நீதிபதி, மாணிக்கம் தாகூர் எம்.பி. தாக்கல் செய்த மனு விசாரணைக்கு உகந்ததல்ல எனக்கூறி தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

DINAKARAN Dated: 05.03.2025

தேர்தல் வழக்கில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நீக்க கோரி

# காங்கிரஸ் எம்பி மாணிக்கம் தாக்கூர் தாக்கல் செய்த மனு தள்ளுபடி

**உயர் நீதிமன்றம் உத்தரவு**



சென்னை, மார்ச் 5: தனக்கு எதிரான தேர்தல் வழக்கில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நீக்கக் கோரி காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாக்கூர் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

தமிழகத்தில் மக்களவை தேர்தலில் விருதுநகர் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட மாணிக்கம் தாகூர் 4 ஆயிரத்து 379 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அவரது வெற்றியை செல்லாது என்று அறிவிக்கக் கோரி தொகுதியில் போட்டியிட்ட தே.மு.தி.க வேட்பாளர் விஜய பிரபாகரன், சென்னை உயர் நீதிமன்ற தேர்தல் வழக்கு தொடர்ந்திருந்தார்.

அவர் தாக்கல் செய்த மனுவில், தேர்தல் வேட்புமனுக்களில் உண்மை தகவல்களை மறைத்ததாகவும், ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் குற்றம் சாட்டியிருந்தார்.

இந்த நிலையில், இந்த வழக்கு தொடர்பான மனுவில் கூறப்பட்டிருந்த சில குற்றச்சாட்டுக்களை நீக்கக் கோரி காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாக்கூர் தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த மனுவை விசாரித்த நீதிபதி சதீஷ் குமார், மனுதாரர் மாணிக்கம் தாக்கூரின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். மேலும், தேர்தல் வழக்கு விசாரணையை அடுத்த வாரத்துக்கு நீதிபதி தள்ளிவைத்தார்.

DINAMANI Dated: 05.03.2025

# தேர்தல் விவகாரங்களுக்கு தீர்வு காண அனைத்துக் கட்சிக் கூட்டம்

## தலைமைத் தேர்தல் ஆணையர் அறிவுறுத்தல்

**புது தில்லி, மார்ச் 4:** தேர்தல் சார்ந்த எந்தவொரு விவகாரத்துக்கும் தீர்வுகாண எல்லா சட்டபூர்வ நிலைகளிலும் அனைத்துக் கட்சிக் கூட்டங்களை மாநில, யூனியன் பிரதேச தேர்தல் துறை அதிகாரிகள் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக தேர்தல் ஆணையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

புது தில்லியில் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச தலைமை தேர்தல் அதிகாரிகளின் 2 நாள் மாநாடு செவ்வாய்க்கிழமை தொடங்கியது. தலைமைத் தேர்தல் ஆணையராக ஞானேஷ் குமார் பதவியேற்ற பின். இதுபோன்ற மாநாடு முதல்முறையாக நடத்தப்படுகிறது.

நாட்டில் தேர்தல் நிர்வாகப் பணிகளில் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் பல்வேறு விஷயங்கள் குறித்து தலைமைத் தேர்தல் அதிகாரிகளுடன் ஞானேஷ் குமார், தேர்தல் ஆணையர்கள் சுக்பீர் சிங் சாந்து, விவேக் ஜோஷி ஆகியோர் கலந்துரையாடினர்.

இந்த மாநாட்டில் ஞானேஷ் குமார் பேசுகையில், 'தேர்தல் சார்ந்த எந்தவொரு விவகாரத்துக்கும் தீர்வுகாண எல்லா சட்டபூர்வ நிலைகளிலும் அனைத்துக் கட்சிக் கூட்டங்களை மாநில, யூனியன் பிரதேச தேர்தல் துறை அதிகாரிகள் தொடர்ந்து நடத்த வேண்டும். அரசமைப்புச் சட்டத்தின் 325, 326-ஆவது பிரிவுகளின் கீழ், 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து குடிமக்களும் வாக்காளராகப் பதிவு செய்யப்படுவதை தேர்தல் துறை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும்.

**800 முதல் 1200 வாக்காளர்கள்:** ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் 800 முதல் 1200 வாக்காளர்கள் இருப்பதற்கும், அந்த வாக்குச்சாவடிகள் வாக்காளரின் வசிப்பிடத்தில் இருந்து 2 கி.மீ. தொலைவுக்குள் இருப்பதையும் தேர்தல் துறை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும்.

ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் எளிதாக வாக்களிக்கும் வகையில், குறைந்தபட்ச வசதிகளை உறுதியான முறையில் வாக்குச்சாவடிகளில் ஏற்படுத்த வேண்டும்.

நகர்ப்புறங்களில் வாக்குப் பதிவு அதிகரிக்கும் வகையில், அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் குடிசைப் பகுதிகளில் வாக்குச்சாவடிகளை ஏற்படுத்த வேண்டும்' என்று அறிவுறுத்தினார்.

இந்த மாநாட்டில் முதல்முறையாக ஒவ்வொரு மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசத்தில் இருந்து ஒரு மாவட்ட தேர்தல் அதிகாரி, ஒரு வாக்காளர் பதிவு அலுவலர் கலந்துகொள்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

DINAMANI Dated: 05.03.2025

# தவறை மூடி மறைக்கும் தேர்தல் ஆணையம்

## திரிணமூல் காங்கிரஸ்

**புது தில்லி, மார்ச் 4:** வெவ்வேறு மாநிலங்களில் ஒரே வாக்காளர் அடையாள எண் உடையவர்கள் போலி வாக்காளர்கள் அல்ல என இந்திய தேர்தல் ஆணையம் விளக்கமளித்த நிலையில், 'தனது தவறை மூடி மறைக்க தேர்தல் ஆணையம் முயற்சிக்கிறது' என்று திரிணமூல் காங்கிரஸ் கட்சி செவ்வாய்க்கிழமை குற்றஞ்சாட்டியது.

வெவ்வேறு மாநிலங்களில் உள்ள சிலருக்கு ஒரே மாதிரியான வாக்காளர் அடையாள எண்கள் வழங்கப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகியிருப்பது நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களில், கடைசி நேரத்தில் புதிதாக ஆயிரக்கணக்கான வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டதாக காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் புகார் தெரிவித்தன. இந்த புகார்களை தேர்தல் ஆணையம் மறுத்தது.

அதுபோல, மேற்கு வங்கத்தில் அடுத்த ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், வாக்காளர் பட்டியலில் பாஜக முறைகேடு செய்ய முயற்சிப்பதாக ஆளும் திரிணமூல் காங்கிரஸ் குற்றஞ்சாட்டி, வீடு வீடாக வாக்காளர்களை சர்பார்க்கும் பணியை அண்மையில் தொடங்கியது.

இந்த குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில், வெவ்வேறு மாநிலங்களில் உள்ள சிலருக்கு ஒரே மாதிரியான வாக்காளர் அடையாள எண்கள் வழங்கப்பட்டிருக்கும் தகவல் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

**தேர்தல் ஆணையம் விளக்கம்:** இந்தப் புகார்களுக்கு விளக்கமளித்த தேர்தல் ஆணையம், 'வெவ்வேறு மாநிலங்களில் ஒரே வாக்காளர் அடையாள எண் உடையவர்கள் போலி வாக்காளர்கள் அல்ல. சிலரின் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (இபிஐசி) எண்கள் ஒரே மாதிரியாக இருக்கலாம்.

ஆனால், அவர்கள் பிறந்த தேதி, தொகுதி மற்றும் வாக்குச்சாவடி என மற்ற தகவல்கள் வேறுபட்டிருக்கும். வருங்காலத்தில் இதுபோன்ற குழப்பங்களைத் தவிர்க்க பதிவுசெய்துள்ள வாக்காளர்களுக்கு வெவ்வேறு இபிஐசி எண்களை வழங்கப்படும்' என்று தெரிவித்தது.

**தவறை மூடி மறைக்கும் ஆணையம்:** இந்த நிலையில், தேர்தல் ஆணையம் தனது தவறை மூடி மறைப்பதாக மேற்கு வங்கத்தில் ஆளும் திரிணமூல் காங்கிரஸ் செவ்வாய்க்கிழமை குற்றஞ்சாட்டியது.

இதுகுறித்து அக் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் சாகேத் கோகுலே தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், 'தேர்தல் ஆணையம் அளித்த விளக்கம், தேர்தல் நடத்தும் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் கையேட்டில் இடம்பெற்றுள்ள நடைமுறைகளுக்கு எதிராக இருப்பதை கட்சியின் தலைவரும் மாநில முதல்வருமான மம்தா பானர்ஜி சுட்டிக்காட்டினார்.

மேலும், தனது தவறை ஒப்புக்கொள்ள தேர்தல் ஆணையத்துக்கு 24 மணி நேர கெடுவையும் திரிணமூல் காங்கிரஸ் திங்கள்கிழமை விதித்தது.

ஆனால், தேர்தல் ஆணையம் தனது தவறை மூடி மறைக்கப் பார்க்கிறது. இதன் மூலம், அதன் செயல்பாடு வெளிப்பட்டுள்ளது.

வாக்காளர் அடையாள எண் என்பது எண் மற்றும் எழுத்துகளுடன் கூடியதாகும். அதில் எந்தவொரு எழுத்தோ அல்லது எண்ணோ மாறாமல், ஒரே வாக்காளர் எண்ணை எப்படி பலருக்கு கொடுக்க முடியும்? மேற்கு வங்கம், ஹரியாணா, குஜராத் மேலும் பல மாநிலங்களில் இதேபோன்று ஒரே மாதிரியான எண்கள் பலருக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. பாஜகவுக்கு சாதகமாக தேர்தல் ஆணையம் செய்த சதி என்பது தெளிவாகிறது.

இத்தகைய போலி வாக்காளர் அடையாள அட்டைகள் குறித்து பாகுபாடற்ற விசாரணை நடத்தப்படவேண்டும். ஒரே எண்ணில் எத்தனை வாக்காளர் அடையாள அட்டைகள் உள்ளன என்ற விவரத்தையும் தேர்தல் ஆணையம் வெளியிட வேண்டும்' என்றார்.

வரவிருக்கும் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் இந்த விவகாரத்தை எழுப்ப காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எழுப்ப திட்டமிட்டிருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

DINAKARAN

Dated: 05.03.2025

### தேர்தல் ஆணையத்தின்

# போலி வாக்காளர் அடையாள எண் குறித்த விளக்கம் மூடி மறைக்கும் செயல்

## திரிணாமுல் காங்கிரஸ் தாக்கு

புதுடெல்லி, மார்ச் 5: டெல்லி, மகாராஷ்டிரா போன்று மேற்குவங்கத்திலும் மோசடி செய்து வெற்றி பெற பாஜ முயற்சிப்பதாக மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி அண்மையில் குற்றம்சாட்டியிருந்தார். இதுதொடர்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை(2ம் தேதி) தேர்தல் ஆணையம், “வெவ்வேறு மாநிலங்களில் வாக்காளர்களுக்கு ஒரே வாக்காளர் அடையாள அட்டை எண் தரப்பட்டிருந்தாலும், தொகுதி, வாக்குச்சாவடி மையங்கள் மாறுபட்டிருக்கும். நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையத்தில் மட்டுமே வாக்களிக்க முடியும். எனவே, ஒரே வாக்காளர் அடையாள அட்டை எண் தரப்படுவது போலியான வாக்காளர்கள் என அர்த்தமாகாது” என விளக்கம் அளித்திருந்தது.

இந்நிலையில் திரிணாமுல் காங்கிரஸ் மாநிலங்களவை உறுப்பினர் சாகேத் கோகலே தன் எக்ஸ் பதிவில், “தேரதல் ஆணையம் அளித்துள்ள விளக்கம் உண்மையில் தவறை மூடி மறைக்கும் செயல். ஏதோ தவறு இருப்பதாக ஒத்துகொண்ட தேர்தல் ஆணையம், அதை ஏற்க மறுக்கிறது.

வாக்காளர் அடையாள அட்டை எண்கள் மூன்று எழுத்துகள், ஏழு இலக்கங்களை கொண்ட எண்ணெழுத்து வரிசை. இதிலுள்ள மூன்று எழுத்துகள் ஒவ்வொரு சட்டப்பேரவை தொகுதிக்கும் வேறுபட்டவை என தேர்தல் ஆணைய கையேடு தெளிவாக கூறுகிறது. எனவே, ஒரே மாநிலத்தில் கூட வெவ்வேறு பேரவை தொகுதிகளில் வாக்காளர்கள் தங்கள் வாக்காளர் அடையாள அட்டையில் ஒரே முதல் மூன்று எழுத்துகளை கொண்டிருப்பது சாத்தியமற்றது.

மேற்குவங்கத்தில் உள்ள வாக்காளர்களுக்கு உள்ளது போன்ற அடையாள அட்டை எண்கள் அரியானா, குஜராத் மற்றும் பிற மாநிலங்களில் உள்ள மக்களுக்கு எவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ளது? மேலும், இந்த எண்கள் வாக்காளர் விவரங்களுடன் இணைக்கப்பட்டுள்ளதால், நகல் எண்கள் வாக்களிக்க மறுக்கப்படுவதற்கு வழி வகுக்கும்.

இது பாஜவுக்கு ஆதரவாக வாக்காளர் அடக்குமுறையை நடத்துவதற்கான சதித்திட்டத்தை தெளிவாக காட்டுகிறது. அங்கு பாஜ அல்லாத இடங்களில் உள்ள வாக்காளர்கள் மற்ற மாநிலங்களில் உள்ள மக்களுக்கு தங்கள் வாக்காளர் அடையாள அட்டை எண்களை வழங்குவதன் மூலம் குறி வைக்கப்படுகின்றனர். பாஜவுக்கு ஆதரவாக தேர்தல் ஆணையம் செயல்பட்டால் தேர்தல்கள் நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடக்க சாத்தியக்கூறுகள் இல்லை” என குற்றம் சாட்டி உள்ளார்.

### அறிக்கை சமர்ப்பிக்க தேர்தல் ஆணையம் உத்தரவு

போலி வாக்காளர் அடையாள அட்டை எண் குறித்த சர்ச்சைக்கு இடையே தலைமை தேர்தல் ஆணையராக பொறுப்பேற்ற ஞானேஷ்குமார் தலைமையில் மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளுடனான இரண்டுநாள் மாநாடு டெல்லியில் நேற்று தொடங்கியது.

இதில் பேசிய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார், “சட்டத்திலும், தேர்தல் ஆணைய அறிவுறுத்தல்களிலும் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளபடி, அனைத்து மாநில, யூனியன்பிரதேச தலைமை தேர்தல் அதிகாரிகள், மாவட்ட தேர்தல் அதிகாரிகள், தேர்தல் நடத்தும் அதிகாரிகள், வட்டார நிலையிலான தேர்தல் அதிகாரிகள் ஆகியோர் தங்கள் பங்கையும், பொறுப்பையும் ஒழுங்காக நிறைவேற்ற வேண்டும்.

இந்திய குடிமக்கள் அனைவரும் வாக்காளர்களாக பதிவு செய்யப்படுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும். மேலும் தேர்தல் அதிகாரிகள் அரசியல் கட்சிகளுடன் தொடர்ச்சியான கூட்டங்களை நடத்தி, சட்டப்பூர்வ கட்டமைப்புக்குள் பிரச்னைகளுக்கு தீர்வு காண வேண்டும். தேர்தல் குறித்த பிரச்னைகள் வாரியாக வரும் 31ம் தேதிக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்” என இவ்வாறு வலியுறுத்தி உள்ளார்.